பக்கங்கள்: 05

# தீம்புனல்
THEEMPUNAL

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:30 | 13.12.2023 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




## இலங்கை வருகின்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி



அயல் நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருவதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வரும் என்று எதிர்பார்க்க முடியும்.

ஏற்கெனவே இரண்டு தடவை இலங்கை வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட நிலையில் அது தடைப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இரண்டாம் கட்ட கொடுப்பனவை வழங்க IMF அனுமதி

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள இரண்டாவது கடன் தவணையான 337 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, இலங்கை காட்டிய முன்னேற்றத்தில் திருப்தி அடைவதாக சுட்டிக்காட்டியுள்ளது.




அதன்படி, முதல் மதிப்பாய்வின் நிறைவிற்கு அமைய SDR 254 மில்லியன் (சுமார் 337 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதி வசதியை உடனடியாக இலங்கைக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தின் விவாதிக்கப்பட்ட நிதிவசதியின் கீழ் இலங்கைக்கு இதுவரை வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி SDR 508 மில்லியன்கள் ஆகும்.

# நன்னீர் நீர்நிலைகளுடன் கலக்கும் மலக்கழிவுகள்



ஆறுமுகம் முன்மொழிந்த யாழ்ப்பாண ஆறு (River of Jaffna ) திட்டத்தின் ஒரு பகுதியான ஆணையிறவிலிருந்து தொண்டமானாறு வரைக்குமனா திட்டத்தின் இடையேயுள்ள ஒரு பகுதியிலேயே வடமராட்சியின் மொத்த மலக்கழிவுகளும் மிக நீண்ட காலமாக ஒரே இடத்தில் பாரிய கிடங்கு அமைத்து கொட்டப்பட்டு வருகின்றது.

வீடுகளில் மலக்குழி வெட்டுவதாக இருந்தால்கூட நிலத்தின் அடியிலும் கரையிலும் நிலத்தடி நீருடன் கலக்காமல் இருப்பதற்கான உரிய பாதுகாப்புகள் வழங்கியே குழி அமைக்கப்படல் வேண்டும்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையே தற்போது வடமராட்சியின் மொத்த இடங்களிலும் வீடுகளில் நிரம்பும் மலக்கழிவுகளை அகற்றும் செயற்பாடுகளை செய்து வருகின்றது. இதற்கான கட்டணங்களும் பொது மக்களால் வழங்கப்படுகின்றது.

ஆனால், அதை எடுத்துக் கொட்டும் இடமோ நன்னீர் நீர்நிலையுடன் சேர்ந்து அமைத்த பாரிய பாதுகாப்பற்ற குழியில் கொட்டப்பட்டு வருகின்றது. இவ்விடத்திற்கு அண்மையில் அமைந்த கிணறுகளில் இடையிடையே எவ்வித பகுப்பாய்வுகளும் மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லை.

# கொழும்பை அலங்கரித்த மஹிந்த

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது கட்சி மாநாட்டுக்காக கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

தற்போது கொழும்பு மாநகரம் முழுவதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதாகைகள் மற்றும் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.



அத்துடன், பிரமாண்ட விளம்பர பலகைகளும் ஏற்றப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்துள்ளது.

இந்த அனைத்து நடக்டிக்கைகளுக்கும் அரசாங்க வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது கட்சி மாநாடு இந்த வாரஇறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# AI மூலம் இலங்கை அம்புலன்ஸில் புதிய முறைமை அறிமுகம்

1990 Suwa Sariya, இலங்கையின் இலவச அம்புலன்ஸ் சேவையானது, AI தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தனது அம்புலன்ஸ் மற்றும் மருத்துவரை ஒருங்கிணைக்கும் நாட்டின் முதல் அம்புலன்ஸ் சேவையாக மாறியுள்ளது.

முன்னதாக, இந்த ஒருங்கிணைப்பு தொலைபேசியில் செய்யப்பட்டது. 'இணைக்கப்பட்ட அம்புலன்ஸ்', உயிர்களைக் காப்பாற்றும் சுவா சரியாவின் பணியை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலவச அம்புலன்ஸ் சேவையின் முன்னோடியான பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சமீபத்திய அபிவிருத்தியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போது, இந்தத் தொழில் நுட்ப சாதனையை சாத்தியமாக்கிய Wavenet மற்றும் Microsoft ஆகிய நிறுவனங்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

சுவா சரியாவின் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பு முதலில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னோடி திட்டமாக ஆரம்பிக்கப்படும் எனவும் அதன் பின்னர் நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, சுவா சரிய ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூ.10,000. வழங்குவதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார்.

# பாராளுமன்ற தேர்தல் குறித்து அறிவிப்பு




முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அவருக்கு நெருக்கமான பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட ஒரு கருத்து கணிப்பை அடிப்படையாகக்கொண்டே அவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு நடைபெறும் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியாகப் போட்டியிட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அது சாதகமாக அமையும் எனவும் சிலர் தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு (2024) தேர்தல் நிச்சயம் நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், முதலில் ஜனாதிபதி தேர்தலா? அல்லது பொதுத் தேர்தலா? நடைபெறும் என்பதை அவர் உறுதியாக அறிவிக்கவில்லை.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# கழிவகற்றல் முகாமைத்துவமும் பிரதேச சபைகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளும்

**யாழ்ப்பாணம் வடமராட்சியில் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக கழிவுகள் அகற்றும் செயற்பாடு இருந்து வருகின்றது. அப்பிரதேசத்தில் சுகாதாரத்தின் அடிப்படையே இக்கழிவுகள் அகற்றும் செயற்பாட்டில் தங்கி உள்ளது. ஒரு பிரதேசத்தின் ஏன் ஒரு நாட்டின் ஆகப் பெரிய வளமே சுகாதாரமான பிரதேசமாக ஒரு நாடு காணப்படுவதாகும்.**

**பிரதேச சபைகளின் பாரிய மிக முக்கியமான பொறுப்பு இக்கழிவுகள் அகற்றும் செயற்பாடு ஆகும். ஆனால் இங்குள்ள பல பிரதேசங்களுக்கு, கிராமங்களுக்கு கழிவுகள் அகற்றப்படுவதற்கு பிரதேச சபைகளால் வாகனங்கள் அனுப்பப்படுவதே இல்லை. உக்காத கழிவுகள், மருத்துவ கழிவுகள், மலக்கழிவுகள் பிரதேச சபைகளாலேயே பொது இடங்களில் அதுவும் ஒரே இடத்தில் கொட்டப்பட்டு வருகின்றது என்று பொது மக்கள் விமர்சனம் தெரிவித்து வருகின்றனர்.**

**எனது நண்பர் ஒருவர் கூறினார். தான் தனது ஊரில் கொட்டப்படும் குப்பை சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு தொலைபேசி மூலம் அழைப்பெடுத்து இப்பிரச்சினை சம்பந்தமாக கதைக்க முற்பட்டவேளை 'குப்பை பிரச்சினைக்கு எல்லாம் எனக்கா அழைப்பு எடுப்பது என்று' அழைப்பைத் துண்டித்து விட்டார் எனக் கூறினார். இங்குள்ள அதிகாரிகளின் நிலை இந்த நிலையில்தான் உள்ளது.**

**மாரி காலங்களில் நுளம்பின் பெருக்கம் தற்போது மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கு முழுப்பொறுப்பும் இப்பொறுப்பற்ற முறையில் கொட்டப்படும் கழிவுகளால் ஏற்பட்ட விளைவே ஆகும். இவற்றை சீர்செய்யாமல் மழைக்காலம் வந்தவுடன் டெங்கு நுளம்பிற்கு எதிரான விழிப்புணர்வு என்று கருத்தரங்குகள் என்று கண் துடைப்புக்கள் செய்து விட்டு காலத்தைக் கடத்தி விடுகின்றார்கள். உண்மையில் அதிகாரிகளுக்கு உரிய முறையில் செயற்பட பணிப்புரைகள் உயர்மட்டங்களில் இருந்து வழங்கப்பட வேண்டும்.**

**அதிகாரிகளும் சமூக நலன் கொண்டு தம் பொறுப்புக்கள் யாது என அறிந்து உணர்ந்து மக்கள் நலனில் சிந்தித்து செயற்பட வேண்டும். பொது மக்களும் பொது அமைப்புக்களும் உரிய முறையில் கேள்விகள் எழுப்பப்படல் வேண்டும். இது அவர்களின் அடிப்படை உரிமை கூட. அவ்வாறு செயற்படாதவிடத்து சுகாதாரமற்ற ஒரு சமுதாயமாக எதிர்காலத்தில் மாற வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு இச்சமூகம் தள்ளப்படும்.**

# 25 மருத்துவமனைகளை முடக்கியது இஸ்ரேல்



பாலஸ்தீனத்தின் காஸா நகர் மீது கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்து வருகிறது. ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இஸ்ரேல் இந்தப் போரைத் தொடங்கியது.

அந்த வகையில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக காஸாவை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் ஹமாஸை ஒழிக்கும் வரையில் எத்தனை மாதங்கள் ஆனாலும் போரைத் தொடருவோம் என சூளுரைத்துள்ளது.

அதேசமயம் போரின் இலக்கை விரைவில் எட்டும் நோக்கில் இஸ்ரேல் படைகள் தீவிர முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் காஸாவில் அனைத்து வழியிலான தாக்குதல்களையும் விரிவுபடுத்தி வருவதாகவும் இஸ்ரேல் அரசு கூறியுள்ளது.

இந்நிலையில், காஸாவில் உள்ள 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகளின் செயல்பாடுகள் இஸ்ரேல் தாக்குதலால் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள 11 மருத்துவமனைகளும் ஓரளவு மட்டுமே செயல்படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காஸாவிலிருந்தபடி உலக சுகாதார அமைப்பின் ரிச்சர்ட் பீப்பர்கார்ன் கூறியதாவது:

"காஸாவிலுள்ள 3 இல் ஒரு பகுதிக்கும் குறைவான மருத்துவமனைகள்தான் ஓரளவுக்கு இயங்கி வருகின்றன. வெறும் 66 நாட்களில் காஸாவின் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்டுவிட்டது. 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகள் செயல்படமுடியாமல் முடங்கியுள்ளன.

வடக்கு காஸாவில் ஒன்று, தெற்கு காஸாவில் 10 என மொத்தம் 11 மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அவையும் முழுமையாக இயங்கவில்லை. காஸாவில் நடத்தப்படும் தாக்குதலால் மருத்துவமனைகளும் பிற சுகாதாரக் கட்டமைப்புகளும் இதற்கு மேலும் நிலைகுலைந்தால் அது தாங்கமுடியாத பாதிப்பை ஏற்படுத்தும். அத்தகைய கொடுமையான நிலை ஏற்படக்கூடாது என்று வேண்டுகிறோம்" என தெரிவித்தார்.

# உலகளாவிய ஆதரவை இழக்கத் தொடங்கியுள்ள இஸ்ரேல் – ஜோ பைடன்

காஸா மீது நடத்திய குண்டுத்தாக்குதல்களினால் இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழக்கத் தொடங்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திவரும் நிலையில் அமெரிக்க



ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், காஸாவில் உடனடி போர் நிறுத்தத்திற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் செத்து கரை ஒதுங்கிய லட்சக்கணக்கான மீன்கள்

ஜப்பானுக்கு சொந்தமான ஹகோடேட் தீவு பிரபல சுற்றுலா தலமாக விளங்குகிறது. இங்கு திடீரென ஏராளமான மீன்கள் செத்து கரை ஒதுங்கின. இதனையறிந்த மக்கள் அந்த மீன்களை சேகரித்து விற்பனை செய்யத்தொடங்கினர். ஆனால் நேரம் செல்லச்செல்ல லட்சக்கணக்கான மீன்கள் செத்து மிதந்தன.

எனவே புகுஷிமா அணுமின் நிலையத்தின் கதிரியக்க கழிவுகள் கலந்ததால் மீன்கள் இறந்ததாகக் கூறப்பட்டது. இதனால் அந்த மீன்களைச் சாப்பிட வேண்டாம் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இதற்கிடையே மீன்கள் இறந்தது குறித்து விசாரணை நடத்துவதற்காக அங்கு ஆராய்ச்சியாளர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் அங்கிருந்து மாதிரிகளைச் சேகரித்து சென்றுள்ளனர்.

அதன் முடிவு வெளிவந்த பின்னரே மீன்கள் இறந்ததற்கான உண்மையான காரணம் தெரிய வரும் என அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# சிங்கப்பூர் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட கடிதம்

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் தற்போதுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக உறவுகளை வலுப்படுத்த சிங்கப்பூர் உறுதிபூண்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் லீ சியென் லொங்க் (Lee Hsien Loong) குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் சிங்கப்பூருக்கு ஜனாதிபதி



ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இடம்பெற்ற இரு தரப்பு கலந்துரையாடல்களைப் பாராட்டி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்திலேயே சிங்கப்பூர் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் அனுகூலமான முடிவுகளுக்கு தனது மனமார்ந்த நன்றியை சிங்கப்பூர் பிரதமர் கூறியுள்ளார்.

# பிரதமரை சந்தித்து நன்றி தெரிவித்த கோபால் பாக்லே



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இலங்கை பிரதமரை சந்தித்து பிரியாவிடை பெற்றதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது. இதன்போது இரண்டு நாடுகளுக்குமிடையிலான நெருக்கமான மற்றும் வலுவான உறவுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன அளித்த தொடர்ச்சியான ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த ஆதரவு தனக்குப் பின்னர் பதவியேற்கும் உயர்ஸ்தானிகருக்கும் வழங்கப்படும் என்று அவர் முழு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் மிகவும் கடினமான காலங்களில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்காக உயர்ஸ்தானிகருக்கு, இலங்கையின் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கோபால் பாக்லே, கர்தினால் மல்கம் ரஞ்சித்தையும் சந்தித்து, இந்தியா-இலங்கை உறவுகளின் நாகரிக தொடர்புகள் குறித்து ஆராய்ந்ததாக இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

# தமிழ் எம்.பிக்களுடனான பேச்சு : திடீரென நழுவினார் ரணில்

நல்லிணக்கம் தொடர்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (13.12.2023) பிற்பகல் நடக்கவிருந்த பேச்சு திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள நிலையில், பிற்பகல் 3 மணிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் எம்.பிக்களை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி சந்தித்துப் பேசவிருந்தார்.

நல்லிணக்கம் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று 11.12.2023 ஆம் திகதியிடப்பட்டிருந்த அழைப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், தவிர்க்க முடியாத காரணங்களால் ஜனாதிபதியுடனான இந்தக் கலந்துரையாடல் இன்று நடைபெறமாட்டாது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட கடிதம் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிர



திநிதித்துவப்படுத்தும் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி செயலகம் அனுப்பி வைத்துள்ளது.

# 2024 வரவு-செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பு இன்று மாலை

2024 ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது. இதன்படி இன்று மாலை 6 மணியளவில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்படும் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின்படி, அரசாங்கத்தின் மொத்தச் செலவீனம் 7,833 பில்லியன் ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அரச சேவைச் செலவீனங்களுக்காக 3,861 பில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் நிதியாண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த செலவீனம் 203 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

2024 ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டு திட்டத்தை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்தார். இதனையடுத்து பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் நடைபெற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனையடுத்து மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் கடந்த நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் ஆரம்பமானதுடன் இன்று அதன் 19 ஆவது நாளாகும். இன்றைய தினம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மீதான குழுநிலை விவாதம் இடம்பெறவுள்ளதுடன் அதன் நிறைவில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

## மஹிந்த - கோபால் பாக்லே சந்திப்பு

இலங்கைக்கான இந்திய தூதுவர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது கோபால் பாக்லேவுக்கு மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பில் வெளிவிவகார



இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நாட்டின் 3 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

புத்தளம், நாத்தாண்டி, குருநாகல், பதுளை மற்றும் ஹாலி-எல ஆகிய சுகாதார வைத்திய அதிகாரப்பிரிவுகளில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. இதனைத் தவிர கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு அபாயம் மேலும் அதிகரித்துள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி அஷானி ஹேவகே தெரிவித்துள்ளார்.



வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், நாட்டில் 80 ஆயிரத்து 222 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# “எந்த ஆராய்ச்சியும் தேவையில்லை இந்தியா தோற்கவே இல்லை” ஸ்டெயின் பரபரப்பு பேச்சு

நேற்று இந்திய தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெற்ற இரண்டாவது போட்டியில் தென் ஆபிரிக்க அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென் ஆபிரிக்க வெற்றியில் மழை ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 19.3 ஓவரில் ஏழு விக்கெட் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்திருந்த பொழுது மழை குறுக்கிட்டது.

இதற்கு அடுத்து மழை சிறிது நேரம் கழித்து நின்று மீண்டும் ஆட்டம் தொடங்கிய பொழுது, போட்டி பதினைந்து ஓவராகக் குறைக்கப்பட்டு, தென் ஆபிரிக்காவுக்கு 152 ஓட்டங்கள் இலக்காக கொடுக்கப்பட்டது.






இந்தச் சூழ்நிலையில் மழை நீர் முற்றிலுமாக மைதானத்தில் இருந்து வடியவில்லை. அப்படி சிறப்பான வசதிகள் தென் ஆபிரிக்க மைதானத்தில் இல்லை. தண்ணீர் மைதானத்தின் மேற்பரப்புக்கு அடியில் தேங்கியிருந்தது. இதனால் பந்து நன்றாக ஊறி விட்டது. எனவே, பந்து பேட்டுக்கு அடிக்க வசதியாக வழுக்கிச் சென்றது. இந்திய பந்துவீச்சாளர்களால் பந்தை நன்றாக பிடித்து வீச முடியவில்லை. எனவே இது இந்திய அணியின் தோல்விக்கு மிக முக்கிய காரணமாக நேற்று அமைந்தது. இந்திய அணி எடுத்திருந்த 180 ஓட்டங்கள், அந்த மைதானத்தில் மிகவும் நல்ல ஸ்கோர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது தென் ஆபிரிக்க அணியின் லெஜன்ட் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் இந்தியாவின் தோல்வி குறித்து கூறும் பொழுது இந்தியா மிகச் சிறப்பாக பந்து வீசியது. ஆனால், அவர்களுக்கு அதிஷ்டம் இல்லை. பீல்டர்கள் சரியான திசையில் இருந்தார்கள். ஆனால், பந்து அவர்களை விட்டு கொஞ்சம் தாண்டி சென்றது. மேலும் அப்படியான பந்துகள் பவுண்டரிக்கும் சென்றது. நேற்றைய போட்டியில் மைதானம் விளையாடுவதற்கு கடினமாக இரண்டாம் பகுதியில் மாறியது. காரணம் பனிப்பொழிவு கிடையாது மழைதான் காரணம். இதன் காரணமாக பந்து நன்றாக வழுக்கிச்சென்றது. பேட்டிங் செய்ய கொஞ்சம் கொஞ்சமாக சாதகமாக மாறியது. இந்த வகையில் இந்திய அணி துரதிஷ்டமானது.

நேற்றைய போட்டி நாளின் முடிவில் இந்திய அணிக்கு சில விடயங்கள் தவறான முறையில் போய் விட்டன. அவர்கள் முதலில் டாசை இழந்தார்கள். பின்னர் அவர்கள் கடினமான இரண்டாம் பகுதியில் பந்து வீச வந்தார்கள். இது உண்மையில் இந்தியா ஆராயக் கூடிய ஆட்டமே கிடையாது. எந்த இடத்தில் தோற்றோம் என்பது குறித்து எல்லாம் இந்தியா தங்களுக்குள் எதையும் யோசிக்கத் தேவையில்லை. அவர்கள் கடினமான சூழ்நிலையில் சிறப்பாக விளையாடினார்கள் என்று கூறி இருக்கிறார்.

# மஹேல இராஜினாமா செய்யவில்லை

இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராகப் பணியாற்றி வரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மஹேல ஜெயவர்த்தன, இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகளை நேற்று (12) செவ்வாய்க் கிழமை சந்தித்தார். 47 வயதான மஹேல சமீபத்திய உலகக்கோப்பையில் இலங்கை அணியின் தோல்விக்கான காரணங்களைப் பற்றி கலந்தாலோசித்தார், மேலும் நாட்டில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்களையும் அவர் வெளிப்படுத்தினார். “அவரது ஒப்பந்தம் இன்னும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கும், மேலும் அவர் பதவியை ராஜினாமா செய்வதை குறிப்பிடவில்லை” என்று கூட்டத்தில்கலந்து கொண்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதே பதவிக்கு மற்றுமொரு முன்னாள் தலைவரும் சகலதுறை வீரருமான சனத் ஜயசூரியவை அமர்த்துவது குறித்து பரிசீலித்து வருகிறோம், எல்லாம் சரியாகி சனத் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டால், மஹேலவைப் போலல்லாமல் முழுநேர ஆலோசகராக இருப்பார். பயிற்சி ஊழியர்களின் செயல் திறனையும் சனத் கண்காணிப்பார் என்று அந்த வட்டாரம் மேலும் கூறியது.



பதவிகளைக் கையாண்டு வரும் விளையாட்டுத்துறை அமைச்சர், உபுல் தரங்கவின் தலைமையில் ஐந்து பேர் கொண்ட தேசிய தெரிவுக் குழுவை நியமித்துள்ளார். புதிய தேர்வுக் குழு உத்தியோகபூர்வமாக (டிசம்பர் 12) முதல் அமுலுக்கு வந்துள்ளது. SLC நிர்வாகம் இப்பதவிக்கு 11 பேர் கொண்ட பட்டியலை அனுப்பியிருந்ததுடன், முந்தைய தேர்வுக் குழுவில் இருந்து தேர்வுக் குழுவின் தலைவர் பிரமோத்யா விக்கிரமசிங்க உட்பட ஒரு சில உறுப்பினர்களும் அதில் உள்ளடங்கியிருந்தனர். “அமைச்சர் குறிப்பாக உலகக் கோப்பையில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு புதிய முகங்களை விரும்பினார். அமைச்சரின் கூற்றுப்படி, முன்னாள் குழு அணியின் அமைப்பைப் பரிசோதித்தது மற்றும் அதில் தோல்விக்கான பொறுப்புக்கூறல் இருக்கவில்லை” என்று அந்த வட்டாரம் மேலும் கூறியது.

# நோவா லைல்ஸ், டுப்லாண்டிஸ் உள்ளிட்டோர் தெரிவு

ஆண்டின் உலகத் தடகள வீரராக நெடுந்தூர ஓட்ட வீராங்கனை பெய்த் கிப்யெகொன், குறுந்தூர ஓட்ட வீரர் நோவா லைல்ஸ், கோலூன்றிப் பாய்தல் வீரரான அர்மண்ட் மொன்டோடுப் லாண்டிஸ், மரதனோட்ட வீராங்கனை டிஜிஸ்ட் அசீஃபா, மரதனோட்ட வீரர் கெல்வின் கிப்டும், முப்பாய்தல் வீராங்கனை யுலிமார் றோஜாஸ் ஆகியோர் நேற்று முன்தினம் பெயரிடப்பட்டுள்ளனர்.




இவ்வாண்டு விருதுகளானது தடம், களம், அரங்கிற்கு வெளியாலென பிரிக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் அனைவரும் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

உலக சம்பியன்ஷிப்பில் 1,500 மீற்றர் மற்றும் 5,000 மீற்றர் ஓட்டங்களை கென்யாவின் கிப்யெகொன் வென்றிருந்தார். இதேவேளை உலக சம்பியன்ஷிப்பில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் வென்றிருந்த ஐக்கிய அமெரிக்காவின் நைல்ஸ், 4x100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தங்கம் வென்ற ஐக்கிய அமெரிக்க அணியிலும் இடம்பெற்றிருந்தார். இந்நிலையில் சுவீடனின் டுப்லாண்டிஸூம், வெனிசுவேலாவின் றோஜாஸூம் உலக சம்பியன்ஷிப்பில் வென்ற நிலையில், எதியோப்பியாவின் அசீஃபா பேர்லின் மரதனிலும் கிப்டும் லண்டன் மற்றும் சிக்காக்கோ மரதனில் வென்றிருந்தனர்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 13.12.2023 அன்று வெளியிடப்பட்டது.